கிறிஸ்து எனது வியாதிகளையும், எனது வேதனைகளையும் சுமந்தார் [பார்க்க, ஏசாயா 53:4–5].

கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன் [பார்க்க, எபி. 13:6].

தேவன் என்னை விசாரிக்கிறவரானபடியால், என் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்திருக்கிறேன் [பார்க்க, 1 பேதுரு 5:7].

நான் பிசாசை எதிர்த்துநிற்பேன், அவன் என்னைவிட்டு ஓடிவிடுவான் [பார்க்க, யாக். 4:7].

இயேசுவுக்காக நான் என் ஜீவனை இழக்கும்போது, மறுபடியும் அதைக் கண்டடைகிறேன் [பார்க்க, மத். 16:25].

நான் கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையாக இருக்கிறேன் [பார்க்க, 1 கொரி. 7:22].

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் [பார்க்க, பிலி. 1:21].

எனது குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது [பார்க்க, பிலி. 3:20].

தேவன் எனக்குள் துவங்கிய நற்கிரியையைச் செய்து முடிப்பார் [பார்க்க, பிலி. 1:6].

தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் என்னில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் [பார்க்க, பிலி. 2:13].

இது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நாம் செய்யக்கூடிய ஆக்கபூர்வமான அறிக்கைகளின் ஒரு மாதிரி மட்டுமேயாகும். இந்தச் சத்தியங்கள் நமது இருதயங்களில் ஆழமாக வேரூன்றும் வரையில் இவைகளைச் சொல்லிக்கொண்டிருப்பது நல்லதாகும். தேவன் சொல்லியிருப்பதற்கு விரோதமாக நாம் ஏதேனும் சொல்லிவிடாதபடி நமது வாயின் வார்த்தைகளைக் காத்துக்கொள்ள வேண்டும்.



# 20

# துதியும் ஆராதனையும்

> அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது. ... உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார் [யோவான் 4:19–24].

ஆராதனையின் மிக முக்கியமான அம்சங்களை நாம் புரிந்துகொள்ளுவதற்கு இயேசுவானவரின் இந்த வார்த்தைகள் அஸ்திபாரமாக இருக்கின்றன. ‘‘உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்களைப்’’ பற்றிப் பேசும் அவர் அவர்களுடைய தகுதிகளை விவரித்திருக்கிறார். இது தொழுதுகொள்ளுபவர்களிடையே உண்மையில்லாமல் தொழுதுகொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டு கிறது. அவர்கள் தாங்கள் தேவனை ஆராதிப்பதாக நினைத்தாலும், உண்மையில் அவரை ஆராதிக்கவில்லை, ஏனென்றால் அவர்கள் அவர் சொல்லும் தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை.

மெய்யாக ஆராதிக்கிறவர்கள் எப்படி ஆராதிக்கிறார்கள் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் – ''ஆவியோடும் உண்மையோடும்'' அவர்கள் ஆராதிக்கிறார்கள். எனவே பொய்யாக ஆராதிப்பவர்கள் ''மாம்சத்திலும் பொய்யிலும்'' ஆராதிக்கிறார்கள் என்று நாம் சொல்ல முடியும். மாம்சீகமாகவும், பொய்யாகவும் ஆராதிப்பவர்கள் ஆராதிப்பதுபோலப் பாவனை செய்தாலும், அது நடிப்பாகும், அது தேவனை நேசிக்கும் இருதயத்திலிருந்து வரவில்லை.

*தேவனை நேசிக்கும் இருயத்திலிருந்து மட்டுமே தேவனை உண்மையாக ஆராதிக்க முடியும்.* எனவே ஆராதனை என்பது நாம் சபையாகக் கூடிவரும்போது செய்யும் ஒன்றல்ல, ஆனால் அது நாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் செய்வதாகும். ஏற்கெனவே ஐந்து முறை திருமணம் செய்துகொண்டு, இப்போது கணவனில்லாத ஒருவனோடு வாழும் ஒரு பெண், தேவனை ஆராதிக்க எது சரியான இடம் என்று விவாதிக்க விரும்புவது வியப்பை அளிக்கிறது. தேவனுக்கு விரோதமான அன்றாட வாழ்க்கை வாழந்துகொண்டு, ஆராதனைகளில் மட்டும் கலந்துகொள்ளும் எத்தனையோ சமயவாதிகளைப்போல இவளும் இருக்கிறாள். இவர்கள் மெய்யாக ஆராதிப்பவர்கள் அல்ல.

இயேசுவானவர் ஒருமுறை பரிசேயரும், வேதபாரகரும் முழு இருதயத்தோடு ஆராதிக்காமல் பொய்யாக ஆராதிக்கிறார்கள் என்று அவர்களைக் கடிந்துகொண்டார்:

> மாயக்காரரே, உங்களைக் குறித்து: *இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது;* மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார் [மத். 15:7–9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவரின் நாட்களில் யூதர்களும், சமாரியர்களும் தாங்கள் ஆராதிக்கும் இடத்துக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்தாலும், இடம் முக்கியமானது அல்ல என்று இயேசுவானவர் சுட்டிக் காட்டினார். மாறாக, ஆராதிக்கும் ஒருவரின் ஆராதனையின் தரத்தை அவருடைய இருதயத்தின் நிலைமையும் தேவனைக் குறித்த அவருடைய மனோபாவமுமே தீர்மானிக்கிறது.

இன்று நாம் சபைகளில் ''ஆராதனை'' என்று அழைப்பதில் பெரும்பாலானவை மரித்துப்போன ஆராதனையாளர்களால் மரித்துப்





போன சடங்குகளைப் பின்பற்றுவதுபோலவே இருக்கிறது. மக்கள் ''ஆராதனைப் பாடல்களைப்'' பாடும்போது, மற்றவர்களின் சிந்தனைகளில் உருவான வாக்கியங்களுக்கு அவைகளைக் குறித்த சிந்தனையில்லாமல் வாயசைக்கிறார்கள். அவர்கள் வீணாய் ஆராதனை செய்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை முறை அவர்களுடைய இருதயத்தில் உண்மையில் என்ன இருக்கிறது என்பதை வெளிக்காட்டிவிடுகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் எந்தவித உண்மையான உணர்வும் இல்லாமல் ''நீர் எவ்வளவு மேன்மையானவர்'' என்று முணுமுணுப்பதைவிட, தமக்கு உண்மையாகவே கீழ்ப்படிகிறவர்களில் ஒருவர் முழு இருயத்தோடும் ''நான் உம்மை நேசிக்கிறேன்'' என்று சொல்லுவதைக் கேட்கவே தேவன் விரும்புகிறார்.

## ஆவியோடு ஆராதித்தல்

''ஆவியோடு'' ஆராதித்தல் என்றால் அந்நிய பாஷையில் பாடுதலும் ஜெபித்தலும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இது இயேசுவானவரின் வார்த்தைகளுக்குச் சரியான மொழிபெயர்ப்பு அல்ல. இயேசுவானவர் ''உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும், அது *இப்பொழுதே வந்திருக்கிறது''* என்று சொல்லியிருக்கிறார். அவர் இதைச் சொல்லும்போது, *ஏற்கெனவே* ''ஆவியோடு'' ஆராதிப்பதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றியவர்கள் இருக்கிறார்கள் என்றே அவர் குறிப்பிடுகிறார். பெந்தெகொஸ்தே நாள் வரையில் எவரும் அந்நிய பாஷையில் பேசவில்லை என்பதை நாம் அறிவோம். எனவே எந்தவொரு விசுவாசியும் அவர் அந்நிய பாஷையில் பேசினாலும் பேசாவிட்டாலும், ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்க முடியும். அந்நிய பாஷையில் ஜெபிப்பதும் பாடுவதும் ஒரு விசுவாசிக்கு அவருடைய ஆராதனையில் உதவிசெய்யும் என்றாலும், அந்நிய பாஷையில் ஜெபிப்பதுகூட முழு இருதயத்தோடும் ஈடுபடாத ஒரு சடங்காக ஆகிவிடக் கூடும்.

துவக்ககாலச் சபையின் ஆராதனையைக் குறித்து ஆர்வத்தைத் தூண்டக்கூடிய ஒரு செய்தியை நாம் அப்போஸ்தலர் 13:1–2 வசனங்களில் காண்கிறோம்:

> அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.

> அவர்கள் *கர்த்தருக்கு ஆராதனை செய்து*, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார் (அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து என்று இங்கே மொழிபெயர்க்கப்பட்டுள்ள வசனம் ஆங்கிலப் பதிப்பில் ''அவர்கள் கர்த்தருக்கு ஊழியம்செய்தபோது'' என்ற அர்த்தத்தைக் கொண்டிருக் கிறது. எனவே மெய்யான ஆராதனை கர்த்தருக்கு ஊழியம் செய்கிறது என்று நாம் அறிந்துகொள்ளுகிறோம். ஆண்டவரே நமது அன்புக்கும் நேசத்துக்கும் உரியவராக இருக்கும்போதுதான் இது உண்மையாக இருக்கிறது.

## ஆராதிப்பதற்கான வழிகள்

இஸ்ரவேலரின் பாமாலை நூல் என்று சொல்லப்படக் கூடிய சங்கீத புத்தகம் பல்வேறு வழிகளில் தேவனை ஆராதிக்கும்படி நமக்குப் போதிக்கிறது. எடுத்துக்காட்டாக, 32ஆம் சங்கீதத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த *முழக்கமிடுங்கள்* (சங். 32:11 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

அமைதியான ஆராதிப்பு அதற்குரிய இடத்தைப் பெற்றிருப்பது போல, சந்தோஷத்தோடு முழக்கமிடுவதும் அதற்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

> நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும். சுரமண்டலத்தினால் கர்த்தரைத் துதித்து, பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; *ஆனந்த சத்தத்தோடே* வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங் கள் (சங். 33:1–3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

நாம் நமது ஆராதனையில் கர்த்தரை நோக்கிப் பாடும்போது அது சந்தோஷமானதாக இருக்க வேண்டும். இதுவும் ஒருவருடைய இருதயத்தின் நிலைமையை வெளியரங்கமாகச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. நமது சந்தோஷமான பாடலோடுகூட வெவ்வேறான இசைக் கருவிகளையும் பயன்படுத்தலாம். என்றாலும் பல சபைகளில் மின்சார இசைக் கருவிகளின் ஓசை அதிகமாக இருக்கிறபடியால் அது





பாடப்படும் சத்தத்தை விழுங்கி விடுகிறது! இசைக்கருவிகளின் ஓசையைக் குறைத்து வைக்க வேண்டும், அல்லது நிறுத்திவிட வேண்டும். சங்கீதக்காரர்களுக்கு இந்தப் பிரச்சினை இருந்ததில்லை!

> என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் *கையெடுப்பேன்* (சங். 63:4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

சரணடைதல் மற்றும் ஒப்புக்கொடுத்தலுக்கு அடையாளமாக நாம் நமது கைகளை உயர்த்தலாம்.

> பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். *தேவனை நோக்கி: உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமா யிருக்கிறீர்*; உமது மகத்துவமான வல்லமை யினிமித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள். பூமியின் மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள் (சங். 66:1–4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

தேவன் தமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாக இருக்கிறார் என்பதை அவரிடம் சொல்லி, அவருடைய பல அற்புதமான பண்பு களுக்காக அவரைத் துதிக்க வேண்டும். தேவனைத் துதித்துப் போற்றச் சரியான வார்த்தைகளைத் தேடுவதற்குச் சங்கீத புத்தகம் மிகவும் சரியான புத்தகமாகும். தொடர்ந்து, ''கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டிருப்பதை நாம் கடந்து செல்ல வேண்டும். அவரிடம் சொல்லுவதற்கு மேலும் அதிகமான காரியங்கள் இருக்கின்றன.

> நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து *குனிந்து* முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள் (சங். 95:6).

நாம் நின்றுகொண்டிருந்தாலும், முழங்காற்படியிட்டாலும், குனிந்தாலும் நாம் இருக்கும் பாவமே ஆராதனையை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

> பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, *தங்கள் படுக்கைகளின்மேல்* கெம்பீரிப்பார்கள் (சங். 149:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

ஆனால் நாம் தேவனை நின்றுகொண்டோ அல்லது முழங்காற்படியிட்டோ தான் தேவனை ஆராதிக்க வேண்டும் என்றில்லை, நாம் படுத்திருக்கும்போதுகூட அவரை ஆராதிக்க முடியும்.

> அவர் வாசல்களில் *துதியோடும்*, அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை *ஸ்தோத்திரியுங்கள்* [சங். 100:4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஸ்தோத்திரம் செலுத்துவது நமது ஆராதிப்பின் ஒரு பகுதியாகும்.

> அவருடைய நாமத்தை *நடனத்தோடே* துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள் [சங். 149:3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நடனத்தோடுகூட நம்மால் தேவனைத் துதிக்க முடியும். ஆனால் இது மாம்சீகமானதாகவும், ஆபாசமானதாகவும், வெறும் கேளிக்கையாகவும் இருக்கக் கூடாது.

> எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்; யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்; பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக [சங். 150:3–6].

இசையில் வரம்பெற்றவர்களுக்காகத் தேனைத் துதிப்போமாக. அவர்கள் அன்பின் இருதயத்தோடு தங்கள் இசைக்கருவிகளை இசைப்பார்களானால், தேவனை மகிமைப்படுத்த அவர்களுடைய வரங்களைப் பயன்படுத்த முடியும்.

### ஞானப்பாட்டுகள்

> *கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்;* அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார் [சங். 98:1அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒரு பழைய பாட்டு வெறும் சடங்காக மாறாதிருக்குமானால், அதைப் பாடுவதில் எந்தவிதக் குற்றமும் இல்லை. நமது இருதயத்திலிருந்து வரும் புதுப்பாடல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் புதிய பாடல்களை உருவாக்க நமக்கு உதவுவார் என்று நாம் பார்க்கிறோம்.

> கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக;





> சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி... [கொலோ. 3:16].

> துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து... [எபே. 5:18–20].

நாம் ‘‘சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும்’’ ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வேண்டும் என்று பவுல் எழுதியிருக்கிறார். அப்படியானால் இவை மூன்றுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்க வேண்டும். ஆதிக் கிரேக்கச் சொற்களை ஆய்வு செய்வதிலும் அதிக உதவியைப் பெற முடியாது. ஒருவேளை ‘‘சங்கீதங்கள்’’ என்பது வேதாகமத்திலுள்ல சங்கீதங்களை இசைக் கருவிகளோடு சேர்ந்து பாடுவதைக் குறிக்கலாம். ‘‘கீர்த்தனைகள்’’ என்பது சபைகளில் வெவ்வேறு விசுவாசிகளால் எழுதப்பட்ட பொதுவான துதிப்பாடல்களாகும். ‘‘ஞானப்பாட்டுகள்’’ என்பது பரிசுத்த ஆவியானவர் தன்னிச்சையாகக் கொடுக்கும் பாடல்களாகும். இது தீர்க்கதரிசன வரத்துக்கு இணையாக இருந்தாலும் வார்த்தைகள் சொல்லப்படாமல் பாடப்படுகின்றன.

துதித்தலும் ஆராதித்தலும் நமது அன்றாட வாழ்க்கையின் அங்கங்களாக இருக்க வேண்டும். அது சபை கூடிவரும்போது மட்டும் நாம் செய்யும் காரியமாக இருக்கக்கூடாது. நாள் முழுவதும் நாம் கர்த்தருக்கு ஊழியம்செய்து, அவரோடு நெருங்கிய ஐக்கியத்தை அனுபவிக்க முடியும்.

### துதித்தல் – செயல்படும் விசுவாசம்

துதித்தலும் ஆராதித்தலும் தேவன்மீது நாம் கொண்டிருக்கும் விசுவாசத்துக்கு இயல்பான வெளிப்பாடுகளாக இருக்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களை மெய்யாகவே விசுவாசிப்போமானால், நாம் தேவனைத் துதித்துச் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் மக்களாக இருப்போம். யோசுவாவும் இஸ்ரவேல் மக்களும் *முதலில்* முழக்கமிட வேண்டியிருந்தது; பிறகே அரண்கள் விழுந்தன. ‘‘கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்’’

(பிலி. 4:4) என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. ''எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்'' (1 தெச. 5:18).

2 நாளாகமம் 20ஆம் அதிகாரத்தில் நாம் துதித்தலின் அற்புதமான வல்லமையைக் காண முடியும். அப்போது யூதாவின் மக்கள் மோவாபியராலும், அம்மோனியராலும் தாக்கப்பட்டார்கள். யோசபாத் அரசனின் ஜெபத்துக்கு மறுமொழியாக தேவன் இஸ்ரவேலருக்கு இந்த வழிமுறைகளைக் கொடுத்தார்:

> ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள் ... இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் (2 நாளா. 20:15—17).

தொடர்ந்து இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது:

> அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கோவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான். பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், *கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்.* எப்படியெனில், அம்மோன் புத்திரரும் மோவாபியரும், சேயீர் மலைத் தேசக் குடிகளைச் சங்கரிக்கவும் அழிக்கவும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள்; சேயீர் குடிகளை அழித்துத் தீர்ந்தபோது, தாங்களும் தங்களில் ஒருவரை யொருவர் அழிக்கத்தக்கவிதமாய்க் கைகலந்தார்கள். யூதா மனுஷர் வனாந்தரத்திலுள்ள





> சாமக் கூட்டண்டையிலே வந்து, அந்த ஏராளமான கூட்டமிருக்கும் திக்கை நோக்குகிறபோது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்து கிடக்கிற பிரேதங்களாகக் கண்டார்கள்; ஒருவரும் தப்பவில்லை. யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும் அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிட வந்தபோது, அவர்கள் கண்ட ஏராளமான பொருள்களும் பிரேதங்களிலிருந்து உரிந்துபோட்ட ஆடை ஆபரணங்களும், தாங்கள் எடுத்துக்கொண்டு போகக் கூடாதிருந்தது; மூன்று நாளாய்க் கொள்ளையிட்டார்கள்; அது அவ்வளவு மிகுதியாயிருந்தது (2 நாளா. 20:20—25 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

விசுவாசம் நிறைந்த துதி பாதுகாப்பையும் பொருள்களையும் கொடுக்கிறது!

துதியின் வல்லமையைக் குறித்து மேலும் ஆய்வு செய்ய, பார்க்க, பிலிப்பியர் 4:6—7 (துதி சமாதானத்தைக் கொண்டுவருகிறது), 2 நாளாகமம் 5:1—14 (துதி தேவனுடைய பிரசன்னத்தைக் கொண்டு வருகிறது), அப்போஸ்தலர் 13:1—2 (துதித்தல் தேவனுடைய நோக்கங்களையும் திட்டங்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவருகிறது), அப்போஸ்தலர் 16:22—26 (துதித்தல் தேவனுடைய பாதுகாப்பையும், சிறைச்சாலையிலிருந்து விடுதலையையும் கொண்டுவருகிறது).